Registered as a News Paper   பக்கங்கள் 04   விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   PEOPLES DAILY   மக்கள் தினசரி

நாதம்: 02   திருவள்ளுவர் ஆண்டு 2022   ஆவணி 21   (06 - 09 - 1991)   வெள்ளிக்கிழமை   ஓசை: 200

## மந்திகைக்கு எக்ஸ்ரேகருவி

(யாழ்ப்பாணம்)

பிரெஞ்சு டாக்டர்களால் மந்திகை ஆதார வைத்திய சாலைக்கு எக்ஸ்ரே கதிர் படம் பிடிக்கும் இயந்திரம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. நீண்ட பல வருடங்களாக இக் கருவி இல்லாமையால் நோயாளர்கள் யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது தெரிந்ததே. தற்போது அங்கு கடமையாற்றும் பிரெஞ்சு டாக்டர்கள் நகர்த்தக்கூடிய சிறிதளவிலான இக்கருவியை குமண கப்பல் மூலம் கொண்டு வந்துள்ளனர். இவ்வாரம் முதல் இது மேற்படி மருத்துவமனையில் பயன்படுத்தப்படும் எனவும் அசைய முடியாத நோயாளருக்கு அருகில் இதனைக்கொண்டு சென்று படம் பிடிக்க முடியும் எனவும் வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

### எதிர்காலச் சந்ததியிடம் ஒரு போராளி

# போராட்டத்தின் சுமைகளையல்ல, விளைவையே தர விரும்புகிறான்

### மாவீரர் கோட்டத் திறப்பு நிகழ்ச்சியில் மகேந்திரராசா

(நமது நிருபர்)

சுதந்திரமாக எமது தாயக மண்ணில் உலவ விரும்பும் போராளி ஒருவன் நாளைய சந்ததியின் கையில் – இன்றைய போராட்டத்தின் விளைவுகளைத் தரதயாராக இருக்கிறான். இந்த போராட்டத்தின் சுமைகளை அந்த இளசுகளின் தலைகளில் இறக்கிவைக்க எந்த ஒரு போராளியும் தயாராக இல்லை! இவ்வாறு வடமராட்சியில் நேற்று நடைபெற்ற மேஜர் ரஞ்சன் நினைவு மாவீரர் கோட்டத்தை திறந்து வைத்து உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா) தெரிவித்தார்

இந்தநிகழ்ச்சியில் மகேந்திரராசா ஆற்றிய உரையின் முழு விபரமும் வருமாறு:

எனது அன்புக்கும், மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று, ஒரு மாவீரனை நினைவு கூருவதற்காக இங்கு

போராளி ஒருவன் தன் தேசத்தில் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகளால் உருவாகின்றான். தாய் நிலத்தின் மீது அவன் கொண்ட பற்றுணர்வும், தன் மக்களை நேசிக்கும் உயர்ந்த குணாம்ச

அவலங்களுக்காக வேதனைப்படும். அதனை மாற்றுவதற்காக வழிகளைத் தேடும் எண்ணம் இருக்கும்.

ரஞ்சன்-இந்த மண்ணில் ஓடும் குழந்தைகளுடனும், வாழும் மக்களுடனும் எவ்வ



காப்பாற்ற வேண்டிய நிலை அவனுக்கு இருந்தது அவனை மாதிரித்தான் இந்தமண்ணின் விடுதலைக்காகப் போராடும் ஒவ்வொரு போராளியின் மனதிலும் ஓர் அகப் போராட்

## நம்பிக்கையில்லாப் பிரேரணை

### சபாநாயகருக்கு எதிராக கொண்டுவரப்படாது

(கொழும்பு

சபாநாயகர்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றும் உத்தேசம் எதுவும் அரசுக்கு இல்லையென்று வாராந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசிய அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் இராஜினாமாச் செய்த இரு அமைச்சர்களுக்கெதிராகவோ அல்லது குற்றம்சுமத்தும் பிரேரணையில் கையொப்பமிட்ட ஐ. தே. க உறுப்பினர்களுக்கு எதிராகவோ நடவடிக்கை எடுக்கும் தீர்மானம் எதுவும் அமைச்சரவையில் ஆராயப்படவில்லை என்று கூறினார். மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் ஆராய்வதற்கு முக்கியவிடயங்கள் இல்லமையினாலேயே பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

# பதவி கவிழ்ப்பு முயற்சியில் மொஸாட் பின்னணியிலுள்ளது

-பிரேமதாசா

(கொழும்பு)

மொசாட் இயக்கத்தினர் தம்மை பதவி நீக்கம் செய்யும் முயற்சியின் பின்னணியில் இருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா குற்றம் சுமத்தியுள்ளார் எதிர்க்கட்சி எம் பிக்களுக்கும், ஐ. தே க அதிருப்தி எம். பிக்களுக்கும் மொசாட் நிதியுதவி செய்திருப்பதாகவும் இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவை மூடிய செயலுக்கு பழிவாங்கவே இந்த முயற்சிஎடுக்கப்பட்டிருப்பதாகவும், அவர் மேலும் கூறியுள்ளார்.

## நெருக்கடியைத் தீர்க்க சமரச முயற்சிகள்

(கொழும்பு)

தற்போதைய அரசியல் நெருக்கடியை சமரசமாக

அதிருப்தியாளர்களும், எதிர்க்கட்சிகளும் கோரிவருகின்றன.

## சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தில் உள்ள விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்கள் அனைவரையும் இன்று மாலை 4-00

நினைவு கூருவதற்காக இங்கு நாங்கள் கூடி உள்ளோம். மேஜர் ரஞ்சனை நீங்கள் நன்றாக அறிந்தவர்கள் அவ னின் உணர்வுகளையும்-எண் ணங்களையும் அதிகமாக விளங்கிக் கொண்டவர்கள். இந்த மண்ணில் வாழ்ந்து இந்த மண்ணில் வளர்ந்து இந்த மண்ணின் வாழ்வுக்காக உயிர் தந்த உன்னதமான போராளிகளில் ஒருவன்தான் மேஜர் ரஞ்சன்.

நேசிக்கும் உயர்ந்த குணாம்ச மும் அவனை சாவுக்கு அஞ் சாத-அர்ப்பணிப்புகளுக்கு தயாரான, உன்னதமான போராளியாக மாற்றுகின் றது.

போராளிகள் பொதுவாக கடுமையான மனங்களைக் கொண்டவர்களில்லை. போராளி ஒருவன், இளகிய எல்லா நெஞ்சங்களையும் நேசிக்கும் இதயம் இருக்கும். அவனுள், தன் மண்ணின்

வாழும் மக்களுடனும் எவ்வ ளவு பரிட்சையமாய் இருந் தான் என்பதை நீங்கள் அறி வீர்கள். உங்களுக்கு நடுவில் சிரித்த படியே திரிந்த அந்த ரஞ்சனுக்கு பின்னால் அவ னின் இதயத்திற்குள் வாழ்ந்த எண்ணங்களை பிரச்சினை களை நீங்கள் ஒரு போதும் அறிந்திருக்க மாட்டீர்கள்.

ரஞ்சன்-ஒரு வறிய குடும் பத்தின் மகன். அந்தக் குடும் பத்தைப் பார்க்க வேண்டிய-

டம் நிகழ்ந்து கொண்டே இருக்கும்.

வெளியில் ஒரு போராளி யைச் சுற்றி நிகழும் நிகழ்ச்சி களை, நாங்கள் எல்லோரும் அறிவோம். தலைக்குமேலே விமானங்கள் குண்டுகளை வீசும். நவீன ஆயுதங்களுடன் முன்னேறி வரும் எதிரியை தடுத்து அவர்கள் நிற்க வேண் டும். மாறும் காலநிலையிலும் இரவிலும், மழையிலும் அவ னிற்க மண்ணைச் சாத்து நிற்க வேண்டும் இத்தகைய எந்த நிலையிலும் எந்த விநாடியி லும் அவன் தன் உயிரையும் இழக்கலாம். இவைகள் ஒரு போராளி வெளியில் சந்திக் கும் எல்லோருக்கும் தெரிந்த சம்பவங்களாகும்.

ஆனால், போராளி ஒருவன் தன் மனதிற் தன்னும் போராட வேண்டியிருக்கின்றது. ஒவ் வொரு போராளியின் மனதி லும் ஓர் ஏழ்மையான குடும் பத்தின் போராட்டம் நிலவும். வறுமையில் தவிக்கும் குடும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நெருக்கடியை சமரசமாக தீர்த்து வைக்கும் முயற்சிகள் கொழும்பில் மேற் கொள்ளப் பட்டு வருவதாக செய்திகள் கூறுகின்றன. அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரசிங் காவும், ஐ.தே.க பொதுச் செயலாளர் சிறிசேன குரேயும் நேற்று முன்தினம் லலித் அத் துலத் முதலியையும், காமினி திஸநாயக்காவையும் சந்தித் துப் பேச்சுவார்த்தைகள் நடத் தியிருப்பதாக ஏஜென்சி செய் திகள் தெரிவித்தன.

பாராளுமன்றம், இருபத்து நான்காம் திகதி கூடும்போது ஜனாதிபதி மீது குற்றச்சாட் டும் மனு விவாதத்திற்கு எடுத் துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் மனு மீதான வாக்கெ டுப்பு இரகசியமானதாக இரு க்க வேண்டும் என்றும் ஐ.தே.க

ஆனால் பாராளுமன்ற விதி முறைகளில் ரகசிய வாக்கெ டுப்புக்கு வழியில்லை என ரணில் விக்கிரமசிங்க கூறியுள் ளார். அதே வேளையில் மனு மீதான விவாதம் நடைபெறு வதையோ, வாக்கெடுப்பு நடத்தப்படுவதையோ ஜனாதி பதி பிரேமதாசா விரும்ப

(4 ஆம் பக்கம் பார்க்க)

மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் சமூகம் தரும்படி விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க வவிசாமம் பொறுப் பாளர் கேட்டுள்ளார். குறிப் பாக கிராமியத் தொடர்பா ளர்களையும், கொத்தணித் தொடர்பாளர்களையும் சமு கம் தரும்படி கேட்டுக்கொள் கின்றனர்.

# மணலாற்றில் தொடர்ந்தும் புலிகள் - ராணுவம் மோதல்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து சிறிலங்கா இரா ணுவத்துக்கும் விடுதலைப்புலி களுக்கும் இடையில் உக்கிர மோதல் இடம் பெற்ற வண் ணம் உள்ளது.

இராணுவம் தரைவழியாக காட்டுப் பகுதியை நோக்கி முன்னேறுவதற்கு உதவியாக விமானப்படை விமானங்கள் கடுமையான குண்டு வீச்சு தாக்குதல்களை நடாத்திய வண்ணம் உள்ளன. விடுதலைப் புலிகள் இராணுவத்தை நோக்கி பலத்த பதிலடி கொடுத்தவண்ணம் உள்ள தால் இராணுவத்திற்கு பலத்தஇழப்புகள் ஏற்பட்டுள் ளதாகவும் தெரியவருகின்றது.

இருந்த போதிலும் இரா ணுவத்தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் பற்றி எந்த ஒரு செய்தியும் நேற்று கொழும் பில் வெளியிடவில்லை.

இதே வேளை இருபத்தி நான்குமணி நேரமும் விமா னப்படை விமானங்கள் மண லாறு பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக சிறிலங்கா இராணுவ வட்டா ரங்கள் நேற்று தெரிவித்தன.

## பாதிப்புக்களை மதிப்பிட ஆய்வுப் பட்டறை

வன்செயல்களின் பாதிப்பு களை மதிப்பீடு செய்தலும், அவற்றிற்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை இலங்கா ணுதலுக்குமான ஆய்வுப்பட் டறையொன்று தமிழர் புனர் வாழ்வுக்கழக மண்டபத்தில் இன்றும் நாளையும் காலை 9 00 மணிதொடக்கம் 4 30 மணிவரைநடைபெறவுள்ளது.

ஆய்வுப் பட்டறையில் இன் றைய தினம் விடுதலைப்புலி கள் மக்கள் முன்னணித் தலை வர் திரு. யோ மகேந்திர ராஜா யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியா அ. துரைராஜா, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள். (மு

## குமண இன்று வருகிறது

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசியத் தேவைப் பொருள்களுடன் குமண இன்று பருத்தித்துறை இற ங்கு துறையை வந்தடையும்.

இக்கப்பலில் அரிசி, மா, பயறு, சீனி, பால்மா, தேயிலை மற்றும் சவர்க்கா ரம் ஆகிய பண்டங்கள் எடு த்து வரப்படுகின்றன இவை ப நோ. கூட்டுறவுச் சங்கங் களுக்கு வழங்கப்படும்.

இவைதவிர இலங்கை செஞ் சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், தனி யார் வர்த்தகருக்கும் குமண வில் மருந்து வகைகள் கொ ண்டு வரப்படுகின்றன.

## புலிகளின் ஆதரவாளரென புதுச்சேரியில் மூவர் கைது

புலிகளுக்கு ஆதரவு அளித் தனர் என்று கூறிப் புதுச்சேரி யில் மூன்றுபேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

நேற்று புதுச்சேரி சட்டப் பேரவையில் முதலமைச்சர் வி.வைத்திலிங்கம் இந்தத் தக வலை வெளியிட்டார்.

தமிழீழத்திற்கு ஆதரவாகத் தமிழ்நாட்டில் வேலூரில்நடை பெறவிருக்கும் மாநாடு ஒன் றிற்கான சுவரொட்டிகளை யும், அழைப்பிதழ்களையும் கைதான இந்த மூவரும் அச் சிட்டனர் என்றும் முதலமைச் சர் தெரிவித்தார்.

## லலித், காமினி மீது ஒழுங்கு நடவடிக்கை

(கொழும்பு)

கட்சிக்கு வெளியே கிளர்ச்சி செய்வதற்கும், குற்றஞ் சாட் டுவதற்கும் ஒழுங்கு நடவடி க்கை எடுக்கலாம் என்று ஐக் கிய தேசியக் கட்சியின் பொ துச் செயலாளர் சிறிசேன குரே அறிவித்துள்ளார்

நேற்று முன்தினம் சிறிசேன குரே விடுத்துள்ள அறிக்கை யொன்றில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதியுடனான பாராளுமன்ற அரசாங்க முறையை மக்கள் பலமுறை அங்கீகரித்துள்ளார் கள் என்றும்:

ஐ.தே. கட்சியினர் எவரே னும் இதனை எதிர்த்தால் அவர் பின்பற்ற வேண்டிய நடவடிக்கை முறை ஒன்று உண்டென்றும் தெரிவித்துள் ளார்.

## லலித் - விக்கிரமசிங்க கொழும்பில் சந்திப்பு

முன்னாள் கல்வி அமைச் சர் லலித் அத்துலத் முதலி யையும், காமினி திசாநாயக் காவையும் நேற்று முன்தினம் கொழும்பில் வைத்து அமைச் சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க, மற்றும் ஐ. தே க. பொதுச் செயலாளர் சிறிசேன குரே ஆகியோர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக ஏஜென்சி செய்தியொன்று கூறியது.

## ஜே வி. பி. நடவடிக்கை தெற்கில் அதிகரிப்பு

தெற்கில் மீண்டும் ஜே வி. பி. யினரின் நடவடிக்கைகள் தலைகாட்டுவதாக முப் படைத் தலைமையக பேச் சாளர் ஒருவர் கூறியுள் ளார்.

அந்தப் பேச்சாளர் மேலும் கூறுகையில் அண்மையில் வல ப்பனை எனும் இடத்தில் பொலிசார் மீது ஜே வி பி யினர் துப்பாக்கி தாக்குதலை நடாத்தினர் என்றார்.

கடந்த இரண்டாம் திகதி அன்று கந்தகெட்டிய எனும் இடத்தில் வழமையான ரோந் துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது திடீரென ஜே வி.பி யினர் துப்பாக்கி வேட்டுத் தீர்த்தனர். இருந்த போதினும் எவரும் காயமடை யவில்லை என்றும் தாக்குதல் நடத்தியவர்கள் ஓடித் தப்பி விட்டனர் என்றும் அந்தப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

## சர்வகட்சி மாநாடு

(கொழும்பு)

சர்வகட்சி மாநாடு வரும் வெள்ளிக்கிழமை மீண்டும் கூடவுள்ளது இதனைத்தொ டர்ந்து 17ஆம், 19ஆம், 20ஆம், 26ஆம், 27ஆம் திகதி களில் நடைபெறும் என அறி விக்கப்பட்டுள்ளது

## தகவல் திரட்டப் படுகிறது

1980ம் ஆண்டு யூலை மாத வேலை நிறுத்தத்தில் ஈடுபட் டோரது விபரங்களை பொது நிர்வாக அமைச்சு திரட்டி வருகின்றது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சிங்கர் தையல் இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு. திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: கௌரி தொழிலகம், 538, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (R/1654)

### அரசாங்க எழுதுனர்சேவை

போட்டிப் பரீட்சைக்கான சனி ஞாயிறு பயிற்சி வகுப்புகள் 8-9-91, 1-30 மணிக்கு ஆரம்பமாகும் விண்ணப்பப்பத்திரத்தையும் விபரக்கொத்தினையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் முழுக்கட்டணம் 275/- School of Business Administration 16, 3 nd Cross Street, Jaffna (B/3068)

## நிர்ணய விலையில் விநியோகம்

சுண்டிக்குளி வர்த்தக நிலையக்களத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு உலர் உணவு விநியோகம் நடைபெறுகின்றது. புதன்கிழமை முதல் மூன்று நாட்களுக்கு விநியோகம் நடைபெறும்.

### ஆரம்பிக்கவில்லை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கின் உடுத்துறைக் கொத்தணியில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் மூன்றாம் தவணைக்காகத் திறக்கப்படவில்லை.

வெற்றிலைக் கேணியில் இராணுவம் தரையிறக்கப்பட்டதையடுத்து, அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள்.

இதன் காரணமாக உடுத்துறைக் கொத்தணியில் உள்ள ஒன்பது பாடசாலைகளும் மூடிக்கிடக்கின்றன.

அப்பாடசாலைகளில் கடமை புரிந்த ஆசிரியர்கள் வேறு இடங்களுககுத் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். (36)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

## லிபிய தூதரகக் கட்டடம் இடிந்து ஒருவர் பலி!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள லிபிய தூதரகக் கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழ்ந்து ஒருவர் இறந்துள்ளார்.

கடந்தசெவ்வாயன்றுதூதரக கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளிகளில் ஒருவர் உயிர் இழந்தார் என்றும் மூவர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உ

சிவமயம்

### யாழ்ப்பாணம், திருவண்ணைநகர் அருள்மிகு வாலாம்பிகா சமேத விசுவலிங்க வைத்தீசுவரசுவாமி திருக்கோயில் (வண்ணை சிவன் கோயில்) ஆலயபரிபாலன சபை

வண்ணை சிவன் கோயில் காணிகளின் குத்தகைக்காலம் முடிந்திருந்தால் அல்லது இதுவரை குத்தகை எழுதாமலே இந்திருந்தாலசம்பந்தப்பட்டவர்கள் புதிய குத்தகை உறுதியை 30.09.1991க்கு முன் பெற்றுக்கொள்ளவும். எழுத்து மூலம் குத்தகை பெறாமல் வைத்திருப்போரிடமுள்ள கோயில் காணிகள் பொறுப்பேற்கப்பட்டு புதியவர்களுக்குக் கொடுக்கப்படும்.

வ.கந்தசாமி (தலைவர்)

வி.நடேஸ்வரன் (செயலாளர்)

தேவஸ்தானம்
4.9.91

(R/1709)

யாழ் | வடமராட்சி

### ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் மஹோற்சவம் 1991

| | | |
|---|---|---|
| கொடியேற்றம்: | 08-09-91 | ஞாயிறு |
| தேர்: | 22-09-91 | ஞாயிறு |
| சமுத்திரதீர்த்தம்: | 23-09-91 | திங்கள் |
| கேணித் தீர்த்தம்: | 24-09.91 | செவ்வாய் |

வாகனப் போக்குவரத்து வசதியீனங்கள்

பருத்தித்துறை பல நோ கூ.சங்கம்(வ/து)
பருத்தித்துறை.

### பதவி வெற்றிடம்:- கணக்காளர் தரம் 104-8

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ்.மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து கோரப்படுகின்றன விண்ணப்பப் பத்திரத்தையும், தகைமைகள் பற்றிய விபரத்தையும் சங்கக் காரியாலயத்தில் பெற்று 1991-09-20 ஆம் திகதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் ''தலைவர், பருத்தித்துறை - ப நோ கூ சங்கம், பருத்தித்துறை'' என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

தலைவர்.
1991-09-04 (B/3066)

## முதலாம் ஆண்டு நினைவு



மயிலிட்டியில் இராணுவத்துடன் நடந்த மோதலில் வீரமரணமடைந்த

### வீரவேங்கை கமல் (இராசரத்தினம் ஜீவராஜன்)

வீர ஜனனம் 16.03.1976 | வீர மரணம் 06.09.1990

மரணத்திடம் மண்டியிட்டு
விடுதலையை விலை பேசும்
கோழைகள் அல்லர் நாங்கள்

லெப்டினன்ட் கேணல் சரா ஞாபகார்த்த

## மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி

நல்லூர் பிரதேசசபை - சனசமூக நிலையங்களின் சமாசம் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்தும் அணிக்கு 7பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி:- 15-09-1991

தொடர்புகளுக்கு:- சமாசத் தலைவர்,
[பி. ப 3மணிக்குப் பின்னர்] வளர்மதி முன்னேற்றக்கழகம், சம்பியன் ஒழுங்கை, கொக்குவில்.
(R/1713)

பருத்தித்துறை ப. நே . கூ. சங்கம் (வ/து)

## அறிவித்தல்

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலுக்காக அங்கத்தவர் அட்டவணை 30 09-1991 உடன் மூடப்படவிருக்கின்றது. அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் தங்கள் தங்கள் கிளைகள் மூலம் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
04.09.1991.

(B/3067)

## நினைவு கூருகின்றோம்...

1991-09-06

1987ஆம் ஆண்டு காணாமல் போய் பின்னர் இதே தினத்தில் ரம்பைக்குளம், மகிழங்குளம் ஆகிய

45ஆம் நாள்
நினைவஞ்சலி



**2-ம்லெப். யஸ்மின்**
**(சின்னத்தம்பி**
**சத்தியமலர் தயா)**

வீரஜனனம் வீரமரணம்
06-03-1972 28-07-1991

'எழுச்சி கொண்டு புலி
யானாய் - எங்கும்
நீவெற்றி கண்டிடவே
கட்டைக்காட்டில்
எதிரியின் துப்பாக்கிக்
குண்டினை-நெஞ்சினிலே
இருமாப்புடனே ஏந்தி
னாய் - உறவிலா
தமிழ்த்தாய் மடியினிலே
- நீ
மாண்பு மிக்க
புகழினைத்தினை
அணைத்துக்கொண்டாய்-
கலங்கியே
எமை வைத்தாய்-மீளாத்
துயர் படைத்தாய்
தொழுகின்றோம்
யஸ்மின் உனை எண்ணி
தமிழீழம் மலரும் நாள்
நீ வந்திடுவாய்
தயா! யஸ்மின்!

ஆனையிரவு மகாயுத்தத்தில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உன்பிரிவால் துயருறும்
அம்மா உடன்பிறந்தோர்
சுற்றத்தார்
அல்வாரை
கொடிகாமம்.

(R-1705)

---

தேணித் தீர்த்தம்: 24-09.91 செவ்வாய்

வாகனப் போக்குவரத்து வசதியீனங்கள் காரணமாக உற்சவங்கள் மாலை 5.00 மணிக்கு நிறைவு பெறும்.

-- தர்மகர்த்தா சபை --

(R/1708)

---

மரணத்திடம் மண்டியிட்டு
விடுதலையை விலை பேசும்
கோழைகள் அல்லர் நாங்கள்
அறப்போர் செய்திடும்
எம தலைவரின் பாதையிலே
போராடி வீரமரணத்தைத்தழுவிக்கொண்டாய் கமல்!

குடும்பத்தினர்,
சித்தங்கேணி மக்கள்.

(B/3062)

---

# நினைவஞ்சலிகள்



**கப்டன் அங்கதன்**
**(ஜெயதிலக நிசாந்தன்)**
வீரஜனனம்:- 31-01-1971
வீரமரணம்:- 17-07-1991
(கட்டைக்காட்டில்)

தமிழீழத் தாகமெனும் தாயக மண்ணை மீட்க போர்க்களம் புகுந்த வீர வேங்கைகளே! நீங்கள் விட்டுச்சென்ற துப்பாக்கிகள் விடிகின்ற நாள் வரைக்கும் சடசடக்கும். ஆனையிறவு, சரித்திரப் போரில் நீங்கள் சிந்தி விட்ட செங்குருதி சிவப் பேற்றும் மண்ணதனை இருள் விலக்கும் விரை வினிலே.



**வீரவேங்கை நிரோ**
**(வல்லிபுரம் உதயகுமாரி)**
வீரஜனனம்:- 21-12-1966
வீரமரணம்:- 11-07-1991
(ஆனையிறவில்)

இந்தப் பாலைவனப் போரில் களப்பலியாகிய அனைத்து மாவீரர்களுக்கும் எமது இதய அஞ்சலிகள்.

ஐயனார் கோவிலடி, சுன்னாகம். (R/1703) ஐயனார் சனசமூக நிலையம்.

---

1987ஆம் ஆண்டு காணாமல் போய், பின்னர் இதே தினத்தில் ரம்பைக்குளம், மகிழங்குளம் ஆகிய பகுதிகளில் சடலங்களாக மீட்கப்பட்ட

- ★ கிருபா
- ★ விஜி
- ★ மகிந்தா
- ★ கரண்
- ★ வரன் (நா.மகேஸ்வரன் - முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு)

1988ஆம் ஆண்டு வட்டக்கச்சியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**லெப்.சீலன்** (ஒட்டுமடம்)

1989ஆம் ஆண்டு இராமநாதபுரத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவு, சிலாவத்தைப்பகுதியில் சிறிலங்காப்படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**லெப்.பெரியண்ணன்** (ஐயாத்துரை அமிர்தலிங்கம் 1-ம் வட்டாரம் கொக்குத்தொடுவாய்)

**2ஆம்லெப்.காதர்** (பரமானந்தன் மணிவண்ணன் - ரயில்நிலையம், மன்னார்)

**கோபால்** (வேலாயுதம் சிவலிங்கம் - 1-ம் வட்டாரம், கொக்குத்தொடுவாய்)

**கோபிநாத்** (விஜயன் குமார் - கொக்கட்டிச்சோலை)

**கஜன்** (செல்வராசா தமிழ்ச்செல்வன் - 2-ம்வட்டாரம், புங்குடுதீவு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3069)

# தென்னிலங்கை அரசியல் நெருக்கடி

# "வர்க்க பேதமே ஒழிய கட்சி வேறுபாடு அல்ல"

தென்னிலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நீண்ட காலமாக இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் இருந்த கொய்கம உயர் வகுப்பினருக்கு ஏற்பட்ட பின்னடைவின் விளைவு. இதற்கு கற்பிக்கப்படும் வேறு காரணங்கள், உண்மையான காரணத்தை முன் வைக்க முடியாததன் வெளிப்பாடேயாகும்.

தென்னிலங்கையில் தோன்றிய அரசியல் நெருக்கடியில் இருந்து சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா தற்பொழுது வெற்றி யீட்டியுள்ளார்போல் தெரிகின்றது. ஐ. தே. கட்சியின் பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் இவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளதன் மூலம் இந்நெருக்கடியில் சற்றுத் தணிவு ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அரசியல



மைப்பை மீறியமை, தேசத் துரோகக் குற்றம், இலஞ்சம் பெற்ற குற்றம், அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தமை, வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கத் தவறியமை போன்ற பல குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் எதிர்க்கட்சியினரும், ஆளும்ஐ. தே. கட்சியினரின் ஒரு பகுதியினரும் இணைந்து சபாநாயகரிடம் வழங்கிய மனுவைத் தொடர்ந்து இந்த அரசியல் நெருக்கடி உருவாகியது. இம்மனுவின் பிரகாரம் அரசியல் அமைப்பின் 38 ஆவது பகுதி அ, ஆ, பிரிவுகளுக் கிணங்க பிரேமதாஸா பதவிநீக்கம்செய்யப்பட வேண்டும் எனக்கோரப்பட்டிருந்தது.

### "வர்க்க பேதமே ஒழிய கட்சி பேதமல்ல"

ஆனால் இக் குற்றச்சாட்டுக்களில் உண்மை, பொய் எந்தளவிற்கு உள்ளது என்பது ஒருபுறம் இருக்க இவ்வரசியல் நெருக்கடி இக் குற்றச் சாட்டுக்களினால் தோற்றுவிக்கப்படவில்லை என்று மட்டும் திட்டவட்டமாகக் கூறலாம். சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கூறியது போன்று தற்பொழுது நிகழ்வது வர்க்கபேதமே தவிர கட்சி பேதமல்ல.

திரு. பிரேமதாஸா சிறிலங்காவின் ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னர் பௌத்த சிங்கள உயர் வகுப்பினரே ஆட்சி அதிகாரத்தின் தலைமையில் அமரலாம் என்ற நிலை இருந்து வந்தது. இதற்காக பல அரசியற் திருமணங்கள் கூட இடம்பெற்றன எஸ். டபிள்யூ, ஆர். டி. பண்டாரநாயக்கா சிறிமாவோ திருமணமும் அவ்வாறனதொன்றே.

ஆனால் திரு. பிரேமதாஸா ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டமை அந்நிலையை மாற்றியமைத்தது. திரு பிரேமதாஸாவின் தெரிவு ஐ தே கட்சியின் பல முக்கியஸ்தர்களுக்கு மனநிறைவை கொடுக்காது விட்டாலும் அன்றைய அரசியல் சூழ்நிலை அதனைத் தடுக்க முடியாது போய் விட்டது

திரு. பிரேமதாஸா ஆட்சி அதிகாரத்திற்கு வந்ததன் மூலமும் அவரால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் என்பனவற்றாலும் இதுவரையிலும் அதிகார வர்க்கமாக இருந்து வந்த 'கொய்கம' உயர் வகுப்பினருக்கு ஏற்பட்ட பின்னடைவே இவ்வரசியல் நெருக்கடிக்குக் காரணமாகும் அதாவது திரு. பிரேமதாஸாவின் நடவடிக்கையால் தமது அதிகாரத் தளம் எதிர்காலத்திலும் தொடர்ந்து பேண வாய்ப்பு எற்பட முடியாமல் போய்விடுமோ என்பதே இவ்வரசியல் நெருக்கடிக்கு முக்கியமான காரணம் என்றால் மிகையாகாது.

இதன் அடிப்படையிலேயே இதுவரை காலமும் எதிரும் புதிருமாக இருந்துவந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உயர் வர்க்கமும், ஐ. தே. கட்சியின் உயர்வர்க்கமும் இப்போராட்டத்தில் எதிர்பாராத வகையில் ஒன்றிணைந்து செயற்பட முன்வந்தன. இதே வேளை தமது தலைமைக்குள் இருந்த உட்கட்சிப் பூசலையும், கருத்து வேறுபாடுகளையும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை உதறி எறிந்துவிட்டு தமது வர்க்க நலனைப் பேண முற்பட்டன.

### பௌத்த மதமும், இந்திய எதிர்ப்பும்

சிறிலங்காவின் அரசியல் எப்

தான் போரின் போது பாகிஸ்தானுக்கு ஆதரவான கொள்கையை ஆரம்பத்தில் கடைப்பிடித்த சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம் இந்தி



யாவின் சிறுமிரட்டலோடு தனது கொள்கையை மாற்றிக்கொண்டது.

அதேபோன்றே மேற்குலகத்துடன் ஒட்டி உறவாடி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இலங்கைத் தமிழர் தேசிய இனப்பிரச்சினையில் இந்தியா நெருக்குதலை ஆரம்பித்த போது எதிர்த்து நிற்கவில்லை. 1987இல் ராஜீவுடன் சமாதான உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டார்

அதாவது கொய்கம ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தினையும், இந்திய எதிர்ப்பு வாதத்தையும் தமது அரசியல் ஆதாயத்திற்காக தேவைக்கு ஏற்ற அளவில்பயன்படுத்தினர் அத்தோடுதேவைக்கேற்பவிட்டுக் கொடுப்புக்களைச் செய்தனர்.

### பிரேமாவின் உறுதியான நிலைப்பாடு

ஆனால் தற்போதைய சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தனக்குள்ள சமூகப் பின்னடைவுகளை நிவர்த்தி செய்வதற்காக இவ்விரு விடயத்திலும் ஒரு உறுதியான நிலைப்பாட்டை கொண்டு தீவிரமாக எதிர்த்தார். இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்பதிலும் பிரேமதாசா பிடிவாதமாக இருந்தார்.

இவ்விரண்டு விடயங்களின் மூலமும் சிங்கள மக்களின் அடிப்படை உணர்வுகளை பிரேமதாசா ஏனைய ஆட்சியாளர்களைவிட வெற்றி கொண்டார் என்றே சொல்லுதல் வேண்டும்.

### பிரேமாவிற்கு சம்பந்தமில்லை

அதேவேளை முன்னாள் சிறிலங்காவின் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவால் 1978இல் உருவாக்கப்பட்ட தற்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையும், விகிதாசார தேர்தல் முறையும் அவரது ஆயுட்கால ஆட்சிக்கும், ஐ தே. கட்சியின் நிரந்தர தனிக்கட்சி ஆட்சிக்கும் என உருவாக்கப்பட்ட ஆட்சிமுறையாகும் இவ்வாட்சி முறைக்கும் தற்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றே கொள்ளுதல் வேண்டும்.

### போராட்டத்தின் மூலம் உயர்ச்சி

பிரேமதாசாவின் நெருக்கடிகள் வெற்றி கொள்ளப்பட்டமைக்கு அவரது கடந்தகால வாழ்க்கையும் ஒரு முக்கிய மானகாரணமாகும். அவரது வாழ்க்கை மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில், பெரும் போராட்டத்தின் மத்தியில் உருவானதாகும் தனது நிலையை உயர்த்திக்கொள்வதற்காக பல போராட்டங்களுக்கும் பிரேமதாசா முகம் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்குரிய போராடும் குணம் பிரேமதாசாவிற்கு என்றும் இருந்ததின் காரணமாகவே பெரும் நெருக்கடியில் இருந்தும் பிரேமதாசா மீளக்கூடியதாக இருந்தது.

# ஜனாதிபதி படிக்கட்டில் அமர்வதை நாம் வரவேற்கின்றோம்

– பிரேமச்சந்திரா

'நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி எமக்குத் தேவையில்லை. இதற்காகவே நாம் போராடுகிறோம். எமது போராட்டத்தின் பின்னர் நிலைமை மாறிவருகிறது. ஜனாதிபதி அரசாங்க எம்பிக்களுடன் படிக்கட்டில் அமர்ந்து படம் பிடித்துள்ளார். இந்த மாற்றம் பாராளுமன்றத்துக்கும் அதிகாரம் வழங்க வேண்டும்.''

இவ்வாறு கடந்த திங்கட்கிழமை பிளவர் டெரஸில் கூட்டத்தைக் கூட்டினார். முதலில் இக் கூட்டத்தை பாராளுமன்றத்தில் நடத்துவதாக இருந்தது.

லலித் அத்துலத்முதலி: எமது இராஜினாமாவின் பின்னர் ஜனாதிபதி செயலகத்திற்கு கூட்டம் மாற்றப்பட்டது

காமினி: நாம் எமது விவகாரத்தை தேசிய விவாதமாக மாற்றத் தயார்.

தோபஸ்து அமைச்சராக இருந்தபோது எல்.ரி.ரி ஈக்கு ஆயுதம் கொடுக்கவில்லை. காலஞ்சென்ற ரஞ்சன் விஜேரட்ன எல் ரி ரி.ஈக்கு ஆயுதம் கொடுப்பதை எதிர்த்தார்.

காமினி: ஆயுதம் மட்டுமா? வாகனம் கொடுத்தனர். பங்கர் கட்ட சிமெந்து கொடுத்தனர்.

ஜி எம். பிரேமச்சந்திரா: எல். ரி. ரி. ஈ யுடன்பேச்சுவார்த்தை நடத்தப்பட்டபோது ஆயுதங்களைக் கீழே வைக்க அவர்கள் இரு நிபந்தனைகளை முன் வைத்தனர். காமினி திசாநாயக்கா மந்திரி சபையில் இருந்து வெளியேற்றப்

டும்.''

இவ்வாறு கடந்த திங்கட்கிழமை பிளவர் டெரஸில் உள்ள லலித் அத்துலத்முதலியின் இல்லத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்தார். இந்த பத்திரிகையாளர் மாநாட்டிற்கு லலித் அத்துலத்முதலி, காமினி திசாநாயக்க, வின்சன்ட் பெரேரா, சமரவீர வீரவன்னி, சந்திரா கன்கந்த பிரேமரத்ன குணசேகர ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பிரேமச்சந்திரா: தொடர்ந்து பேசியபோது ஜனாதிபதி ஊழலை எதிர்க்கிறார் நீதி நியாயத்துக்காகக் குரல் எழுப்புகிறார். நாம் ஜனாதிபதி மீது அரசியல் குற்றம் சுமத்தியுள்ளோம். எமது பிரேரணையை பாராளுமன்றத்தில் விவாதிக்க இடமளித்து தனது தூய்மையை உலகறியச் செய்யட்டும் என்றார்.

காமினி திசாநாயக்கா: நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியா? பாராளுமன்ற ஜனநாயகமா? எது தேவை என்பதைத் தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தத் தயார் என்று ஜனாதிபதி அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். 1989 ஆம் ஆண்டிலும் இதே விதமாக அவர் கூறியிருக்கிறார். சர்வஜன வாக்கெடுப்பை அவர் உடனடியாக நடத்தட்டும்.

லலித் அத்துலத்முதலி: எந்த நேரத்திலும் நாம் சர்வஜன வாக்கெடுப்பை எதிர்நோக்கத் தயார். உடனடியாக அவர் செயல்படட்டும்.

காமினி திசாநாயக்கா: நாம் தனிப்பட்ட ரீதியில் ஜனாதிபதியை எதிர்க்கவில்லை. அவர் இன்னமும் ஐ. தே. க. தலைவர் அந்த ரீதியிலேயே அவர் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் ...

காமினி: நாம் எமது விவகாரத்தை தேசிய விவாதமாக மாற்றத் தயார்.

லலித்: சர்வஜன வாக்கெடுப்பை ஒரு மாதத்தில் வைக்கலாம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையில் நாம் அதிருப்தி அடைந்துள்ளோம். எமது அனுபவமே இதற்குக்காரணம்.

நிருபர்: அரசாங்க எம்.பிக்கள் 47 பேர் உங்கள் பக்கம் இன்னமும் உள்ளனரா?

லலித்: ஆம், எமது கோரிக்கையை ஏற்று இரகசிய வாக்கெடுப்பு நடத்தினால் அரச எம். பிக்களில் 75 சத வீதமானோர் எம்மையே ஆதரிப்பர். எமது பிரேரணையில் கைச்சாத்திடாத எம். பிக்கள் கூட பாராளுமன்ற ஜனநாயகத்தை ஆதரிக்கின்றனர்.

நிருபர்: 116 அரச எம்.பிக்கள் கோரிக்கை விடுத்தால் பிரேரணையை வாபஸ் பெற முடியுமா?

லலித்: எதிர்க்கட்சியினரும் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளனர். எனவே அதை வாபஸ் பெறுமாறு அரச எம். பிக்களுள் எப்படி கோர முடியும்? திருமண பதிவை வாபஸ் பெற கடிதம் எழுதுவது போன்ற முயற்சிதான் நடக்கிறது.

நிருபர்: பகிரங்க வாக்கெடுப்பில் 75 சதவீத ஆதரவு உங்களுக்குக் கிடைக்காதா?

லலித்: மாட்டாது. 50 வீதம் கிடைக்கலாம்.

நிருபர்: எல்.ரி.ரி.ஈயுடன் உங்களை சம்பந்தப்படுத்தி போஸ்டர் ஒட்டப்பட்டுள்ளதே?

காமினி: எமது மக்களின் அறிவை மட்டமாகக் கணிப்பது சரியல்ல.

லலித்: எல். ரி. ரி. ஈயை அவமதிப்பது போன்ற செயல் இது.

காமினி: எல். ரி. ரி ஈக்கு ஆயுதம் கொடுத்தது யார்?

லலித்: நான் தேசிய பந்... முன் வைத்தனர். காமினி திசாநாயக்கா மந்திரி சபையில் இருந்து வெளியேற்றப்படவேண்டும் என்பது ஒரு நிபந்தனை இந்திய அமைதி காக்கும் படையை வெளியேற்ற வேண்டுமென்பது அடுத்த நிபந்தனை. காமினியை வெளியேற்றலாம் இந்தியப்படை வெளியேறாவிடில் என்ன செய்வதென அவர்களிடம் கேட்கப்பட்டது. ஆயுதம் தாருங்கள் நாம் அவர்களைத் தாக்குகிறோம் என எல்.ரி.ரி ஈயினர் கூறினர்.

லலித்: எமது வீர இளைஞன் காமினி குலரத்ன கொல்லப்பட எல்.ரி.ரி ஈக்கு சொடுக்கப்பட்ட ஆயுதமே காரணமாக இருந்திருக்கலாம். இந்த வீரனின் தாயாரிடம் நான் 50,000 ரூபா சேகரித்துக் கொடுத்தேன்.

பிரேமச்சந்திரா: ஜோஸி முடன் எமக்குத் தொடர்பில்லை. கெலினோ பற்றியும் எமக்குத் தெரியாது எங்களில் யாரும் ஜோஸிமுடன் இருப்பதாக புகைப்படங்கள் இருந்தால் அவற்றைப் பகிரங்கப்படுத்தட்டும் இதை சவாலாக விடுகிறேன்.

லலித்: நாம் ஜனசவியவையும் எதிர்க்கவில்லை நிறைவேற்று ஜனாதிபதியையே எதிர்க்கிறோம்.

காமினி: வடக்கில் யுத்தம் நடக்கும் போது தெற்கில் கம் உதாவ விழா கொண்டாடப் படுகிறது.

லலித்: இன்னும் இரண்டு வாரங்களில் மக்கள் ஆதரவு எம் பக்கம் அலையென திரளப் போகிறது. மகாநாயக தேரோக்களும் மற்றவர்களும் தனி ஒருவரிடம் அதிகாரம் திரள்வதை ஆதரிக்கிறார்களா?

பௌத்த மதமும், இந்திய எதிர்ப்பும்

சிறிலங்காவின் அரசியல் எப்பொழுதும் பௌத்தத்திற்கான முன்னுரிமையையும், இந்திய எதிர்ப்பு வாதத்தையும் தனது அடிப்படைப் பண்புகளாகவே கொண்டிருந்தது இவற்றை அடிப்படையாகக் கொண்டே தமது அரசியலை அரசியல் வாதிகள் நடத்தி வந்தனர்.

இலங்கையில் இருந்து ஐரோப்பியர் வெளியேறிய பின்னர், ஆட்சிக்கு வந்த கொய்கம வகுப்பினர் அரசியல் சட்டத்தில் பௌத்தத்திற்கு முன்னுரிமை அளித்ததோடு. இந்தியாவிற்கு எதிரான வெளியுறவுக் கொள்கையையும் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தனர். ஆனால், அவர்களில் யாரும் பௌத்

**ஜெயா**

தத்திற்கு ஒரு தனியான அமைச்சை அமைக்கவோ அன்றி இந்தியாவுடன் நேரடியாக விரோதித்துக் கொள்ளவோ தயாராக இருக்கவில்லை. நெருக்கடிகள் வரும் போது இந்தியாவிற்கு விட்டுக் கொடுப்புக்களைச் செய்யத் தயாராகவே இருந்தனர்.

இந்தியாவிற்கு விட்டுக் கொடுப்பு

ஆங்கிலேயர் இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி கடைப்பிடித்த வெளியுறவுக் கொள்கை இந்தியாவுடன் பகைமையை வளர்த்து வந்தலைத. உணர்ந்த எஸ்- டபிள்யூ ஆர் டி.பண்டாரநாயக்கா தான் பதவிக்கு வந்ததும் அணிசேராக் கொள்கை என நேரு பின்னால் சென்றதனால் முரண்பாட்டைத் தவிர்த்துக் கொண்டார்.

1971இல் இந்தியா -பாகிஸ்... செய்வதற்காக இவ்விரு விடயத்திலும் ஒரு உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருந்தார்.

பௌத்த மதத்திற்கென ஒரு அமைச்சு அமைக்கப்பட்டதுடன் அதன் அமைச்சுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். 1989இல் திரு. பிரேமதாசா ஜனாதிபதியாக கண்டி தலதாமாளிகையில் எண்கோண மண்டபத்தில் நின்று சத்தியப் பிரமாணம் செய்யப் போவதாக அறிவித்தபோது அதற்குப் பௌத்த சங்கங்களின் அங்கீகாரம் இருக்குமா என சலசலப்புகள் எழுந்தன ஆனால் இருவருடங்களின் பின் தற்பொழுது பிரேமதாசா பௌத்தத்திற்கு கொடுத்த முக்கியத்துவத்தினால் அவரை அங்கீகரித்தும், ஆதரவு தெரிவித்தும் பௌத்த சங்கங்கள், மகாநாயக்கர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

தனியாக கொய்கம வகுப்பாரை மட்டுமே கொண்ட முக்கிய இரு பௌத்த சங்கங்களான மல்வத்த பீடமும், அஸ்கிரிய பீடமும் கண்டி தலதாமாளிகையின் தியவதன நிலமேயும் 'பிற்படுத்தப்பட்ட' வகுப்பைச் சேர்ந்த பிரேமதாசாவை ஆதரிக்கும் அளவிற்கு பௌத்தமதம் என்றுமில்லாதவாறு பேணப்பட்டது அதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டும் இருந்தது. அதாவது தமது அங்கீகாரத்திற்காக திரு பிரேமதாசா மேற்கொண்ட முயற்சியில் வெற்றி பெற்றார் என்றே சொல்லலாம்.

இதனைப் போன்றே இந்திய எதிர்ப்பு வாதத்திலும் திரு. பிரேமதாசா தனது இறுக்கமான பிடியில் இருந்து தளரவில்லை. 1987 ஆம் ஆண்டு இந்தியா – சிறிலங்கா சமாதான உடன்படிக்கையை ... னமாகவே பெரும் நெருக்கடியில் இருந்தும் பிரேமதாசா மீளக்கூடியதாக இருந்தது.

1988 ஆம் ஆண்டு பிரேமதாஸா ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்ட போதும் ஐ தே. கட்சியில் இருந்த உயர் வகுப்பினரால் சில சவால்கள் உருப்பெற்றாலும் ஜே வி. பி.யினரின் நெருக்கடி அவர்களைப் பின்னடையச் செய்தது. வாழ்க்கையில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து நெருக்கடிகளின் ஊடாக வளர்ந்த பிரேமதாஸா இந் நெருக்கடிக்கும் முகம்கொடுக்க தயாரானார். தனது கடந்த கால வழிமுறைகளைப் பின்பற்றியே ஜே வி பியினரின் கிளர்ச்சியையும் அடக்கினார். ஜே. வி பி யின் கிளர்ச்சியின் போது சுமார் 40 000 க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டாலும், கிளர்ச்சியின்போது அவர்கள் கடைப்பிடித்த வழிமுறைகள் பிரேமதாஸா அரசை நெருக்கடியில் இருந்து காப்பாற்றியது. இக் கொலைகளை கமக்குச் சாதகமாகவும் பிரேமதாஸ விற்கு எதிராகவும் பயன்படுத்த எதிர்க்கட்சிகள் கடந்த காலத்தில் எடுத்த முயற்சிகளும் தோல்விகண்டன

இனியும் போராட வேண்டிவரும்

ஆனால், கடந்த வாரம் தோன்றிய நெருக்கடியை சிறிலங்கா ஜனாதிபதி தம் போதைக்கு சமாளித்து இருப்பினும் அந் நெருக்கடியில் இருந்து நிரந்தர தீர்வு ஏற்பட்டுவிட்டது எனக் கொள்ள முடியாது.

தற்பொழுது உருவாகியுள்ள பிரச்சினை உடன் ஏற்பட்டதல்ல. திரு. பிரேமதாஸா ஜனாதிபதி வேட்பாளராக

(4ஆம் பக்கம் பார்க்க)

# பழைய சோவியத் அமைப்பு கலைப்பு; புதிய கூட்டமைப்பு உதயம்

(மொஸ்கோ)

சோவியத் பாராளுமன்றம் அதன் பழைய அதிகார அமைப்பை மாற்றி சோவியத் யூனியனை புதிய சுதந்திர நாடுகளின் கூட்டமைப்பாக அமைப்பதற்கு சோவியத் பாராளுமன்றம் நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது. சோவியத் அதிபர் கொர்பசேவும், பத்து குடியரசுகளின் தலைவர்களும் முன்வைத்த ஏழு அம்சத் தீர்மானம் எதிர்பாராத வகையில் பாராளுமன்றத்தில் அமோக ஆதரவைப் பெற்றுள்ளது.

இதன்படி இப்போதுள்ள சோவியத் அமைப்பு கலைக்கப்படும். குடியரசுகளுக்குமுழு சுதந்திரம் அளிக்கக்கூடிய வகையில் கூட்டமைப்பை ஏற்படுத்த விரைவில் உடன்படிக்கை கையெழுத்திடப்படும். கடந்த நான்கு நாட்களாக நடந்த சோவியத் பாராளுமன்றத்தின் அவசரக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஏழு அம்சங்களின் ஒவ்வொரு அம்சமும் தனித்தனியாக விவாதத்திற்கு விடப்பட்டு வாக்கெடுப்பு நடாத்தப்பட்டபோது ஆயிரத்தி அறுநூறு வாக்குகளுக்கு மேலான ஆதரவைப்பெற்றது. நாற்பத்தொன்பது பேர் எதிர்ப்புத் தெரிவித்தனர். அறுபத்தொரு பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இத்தீர்மானத்தின் மூலம் எழுபது ஆண்டுகளாகச்சோவியத்தின் மத்திய நிர்வாக அமைப்புக் கலைக்கப்பட்டு கொர்பசேவ் தலைமையிலான புதிய இடைக்கால அரசிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## சோவியத் அணுவாயுதங்கள் மத்தியில் இருக்க வேண்டும் - ஜேம்ஸ் பேக்கர்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் அணு ஆயுதங்கள் அனைத்தும் மத்திய ஆட்சியின்கீழ் இருத்தல் வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஜேம்ஸ் பேக்கர் தான் அடுத்த மாதம் மொஸ்கோ செல்ல விருப்பதாகவும், அப்போது இது குறித்து பேசவிருப்பதாகவும் தெரிவித்தார்.

சோவியத்தின் அனைத்து அணு ஆயுதங்களும் ஒரு மத்திய ஆட்சியின்கீழ் இருத்தல் வேண்டும் என்றும், ஒரு குடியரசின் கீழ் இருக்கவேண்டும் என்பதில்லை என்றும், சோவியத் யூனியனில் பரவலாக்கப்பட்ட அரசியல் சட்டுப்பாடு எதனையும் அமெரிக்கா கோரவில்லை என்றும், ஜேம்ஸ் பேக்கர் தெரிவித்தார்

## பணமாக ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி மேற்தரக் கிளையில் ஜூலை மாதத்திற்கான சிவில் ஓய்வூதியம் பணமாக வழங்கப்படுகிறது.

ஓய்வூதியக்காரர் தமது ஓய்வூதியப் பணத்தினை 5ஆம், 6ஆம், 9ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் 10-30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம் என வங்கியின் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (ச)

## சங்கக்கிளை திருட்டு உள்வீட்டு விவகாரம்

(யாழ்ப்பாணம்)

கைலாச பிள்ளையார் கோயில் முன்றலில் உள்ள யாழ். ப. நோ. கூ. சங்கக் கிளை 13 இல் உலர் உணவுப் பொருள்கள் திருடப்பட்டது தொடர்பாக அக்கிளையின் முகாமையாளர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

யாழ். ப. நோ. கூ. சங்க நிர்வாகம் மேற்கொண்ட முயற்சிகளால் களவு போன பொருள்களின் ஒரு பகுதி கண்டுபிடிக்கப்பட்டதோடு சந்தேக நபரான சங்கக்கடை முகாமையாளர் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சனியன்று அதிகாலை சங்கக்கடையின் கதவுகள் உடைக்கப்பட்டு ரூபா 40,000 பெறுமதியான உலர் உணவுப் பொருள்களும் வேறு சில்லறைப் பொருள்களுமே திருடப்பட்டுள்ளன. வெளியில் இப்பொருள்களின் பெறுமதி ரூபா ஒரு இலட்சம் இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. விசாரணை தொடர்கிறது.

போராட்டத்தின்

பம், உணவுக்காக ஏங்கும் எதிர்பார்க்கும் சின்னத் தம்பி தங்கைகள் இப்படி, நெஞ்சை வருத்தும் எல்லா நினைவுகளுக்கெதிராகவும் அவன் போராட வேண்டும். இதனை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்லுகின்றேன். எங்கள் ஒவ்வொரு போராளியும் உங்கள் பிள்ளைகள், அவன் உணர்வுகள்மரத்தவனல்ல உயிருள்ள ஜீவன். தனதும் தன் குடும்பத்தினதும் நலன்களை மறுத்து தன் தேசத்தின் நலன்களை மனதில் நினைத்து போராடும் உயர்ந்த மனிதனொருவனே போராளி என்பவன் என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்டதொரு நிலையிலிருந்து கொண்டே ரஞ்சனும் இந்த மண்ணைக்

விழும் ஒவ்வொரு குண்டுகளும் அவனுக்கு அச்சத்தைத்தராது மனதின் ஓர்மத்தை வளர்க்கும். இழப்புக்கள் ஒவ்வொன்றும் அவனைச் சோர்வடையச் செய்யாது-உறுதி பெறச் செய்யும்.

சுதந்திரமாக எம் தாயக மண்ணில் உலவ விரும்பும் போராளி ஒருவன் நாளைய சந்ததியின் கைகளில் - இன்றைய போராட்டத்தின் விளைவுகளைத் தர தயாராக இருக்கின்றான். இந்தப் போராட்டத்தின் சுமைகளை அந்த இளசுகளின் தலைகளில் இறக்கி வைக்க எந்தவொரு போராளியும் தயாராக இல்லை.

இங்குஇன்றுநிற்கும்மாவீரர் கோட்டம் எங்கள் போராளிகளின் நினைவுகளையும், அவர்களின் இலட்சிய தாகத்தையும் உங்களுக்குச் சொல்

### 90ஆம் நாள்

## வீர நினைவலைகள்



## வன்னியில் தியாகி திலீபன் தடகளப் போட்டிகள் 10 ஆம் திகதி ஆரம்பம்

(வவுனியா)

தியாகி திலீபன் ஞாபக தடகள விளையாட்டு போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் வன்னிப் பிராந்தியத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் வட்ட மட்டங்களில் அதாவது உதவி அரச அதிபர் பிரிவு மட்டங்களில் நடைபெற உள்ளன. தெரிவு முடிவு நிகழ்ச்சிகளாக இப்போட்டிகள் நடைபெறும். தடகளவிளையாட்டுவிழா சம்பந்தமானபூரணஅறிவித்தல்களைமாவட்ட விளையாட்டு ஒருங்கிணைப்பு குழுவே வெளியிடும். தெரிவு நிகழ்ச்சிகள் வட்ட மட்டத்திலும், முடிவு நிகழ்ச்சிகள் மாவட்ட மட்டத்திலும் ஓர் இடத்தில் நடைபெறும் என சகல விளையாட்டு வீரர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்திலான நிகழ்ச்சிகள் வருமாறு:

- ★ துவிச்சக்கர வண்டி ஓட்டம் ஆண்கள் 60 மைல் பொது)
- ★ துவிச்சக்கர வண்டி ஓட்டம் பெண்கள் 15 மைல் (பொது)
- ★ மரதன் ஓட்டம் ஆண்கள் 10 மைல் (பொது)
- ★ மரதன் ஓட்டம் பெண்கள் 05 மைல் (பொது)
- ★ மாட்டு வண்டி சவாரி (பொது)
- ★ உதைபந்தாட்டம் (வட்ட மட்டத்தில் ஒரு குழு மோதல்) தெரிவு/முடிவு
- ★ வலைப்பந்தாட்டம் (வட்ட மட்டத்தில் ஒரு குழு மோதல்) தெரிவு/முடிவு
- ★ கரப்பந்தாட்டம் (வட்ட மட்டத்தில் ஒரு குழு மோதல்) தெரிவு/முடிவு
- ★ துவிச்சக்கரவண்டி அஞ்சல் (வட்ட மட்டக்குழு இரண்டு)
- ★ அஞ்சல் ஆண்/பெண் - 200, 400 மீற்றர்
- ★ தடை ஓட்டம் ஆண்/பெண் (பொது) முடிவு
- ★ 5000 மீற்றர் ஓட்டம் ஆண்/பெண் (பொது) முடிவு
- ★ 3000 மீற்றர் ஓட்டம் ஆண்/பெண் (பொது) முடிவு
- ★ 1500 மீற்றர் ஓட்டம் ஆண்/பெண் (பொது) முடிவு
- ★ 800 மீற்றர் ஓட்டம் ஆண்/பெண் (பொது) தெரிவு/முடிவு
- ★ 400 மீற்றர் ஓட்டம் ஆண்/பெண் (பொது) தெரிவு/முடிவு
- ★ 200 மீற்றர் ஓட்டம் ஆண்/பெண் (பொது) தெரிவு/முடிவு
- ★ 100 மீற்றர் ஓட்டம் ஆண்/பெண் (பொது) தெரிவு/முடிவு
- ★ நீளம் பாய்தல் ஆண்/பெண் (பொது) தெரிவு/முடிவு
- ★ வேகநடை 400 மீற்றர் ஆண்/பெண் (பொது) முடிவு
- ★ உயரம் பாய்தல் ஆண் (பொது) தெரிவு/முடிவு
- ★ குண்டெறிதல் ஆண்/பெண் (பொது) தெரிவு/முடிவு
- ★ தட்டெறிதல் ஆண்/பெண் (பொது) தெரிவு/முடிவு
- ★ விநோத உடை (பொது வட்ட மட்டத்தில்)
- ★ சிறுவர் நிகழ்ச்சி
- ★ உத்தியோகத்தர் நிகழ்ச்சி
- ★ பார்வையாளர் நிகழ்ச்சி

நெருக்கடியை

வில்லை எனத் தெரிகிறது குற்றச் சாட்டுகள் பாராளுமன்ற பதிவேடுகளில் இடம்

## கடலினுள் லொறி புரண்டது

(கொடிகாமம்)

டும். அப்படிப்பட்டதொரு நிலையிலிருந்து கொண்டே ரஞ்சனும் இந்த மண்ணைக் காத்து நின்று போராடினான்.

எங்கள் போராளிகளின் எண்ணங்களை - அவர்களின் இலட்சிய தாகத்தை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள் என நான் நினைக்கின்றேன். காவலரண் ஒன்றில், கண் விழித்திருக்கும் போராளி ஒருவனுக்கு அருகில் நிகழும் ஒவ்வொரு மரணமும் - அவனது சாவையும் உறுதிப்படுத்தும். ஆனாலும் அவன் நிமிர்ந்து தேசத்தைக் காப்பதையே இலக்காக கொண்டு நிற்பான்.

களின் நினைவுகளையும், அவர்களின் இலட்சிய தாகத்தையும் உங்களுக்குச் சொல்லிக் கொண்டு இருக்கும். போராளிகளின் வியர்வையால் வழிந்தோடும் குருதியால்கட்டி எழுப்பப்பட்ட எங்கள் தேசம் காப்பாற்றப்படவேண்டும் என்ற செய்தியை இந்த நினைவாலயம் ஒவ்வொரு நாளும் சொல்லும். சுதந்திரத்திற்காக - விடுதலைக்காக நாங்கள் சந்தித்த வேதனைகளை - சவால்களை - வெற்றிகளை எல்லாம் காலாதிகாலமாக இந்தக் கோட்டம்சொல்லிக்கொண்டு நிற்கும்.


குற்றச் சாட்டுகள் பாராளுமன்ற பதிவேடுகளில் இடம் பெற்றுவிட்டால் அவற்றை விசாரிக்கும்படி நெருக்கடிகள் உருவாகலாம் என்று பிரேமதாசா அஞ்சுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது. இதற்காக சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் அதிருப்தியாளர்களுடன் பேரம்பேசுதலில் ஈடுபட்டிருப்பதாக நேற்றிரவு பி. பி.சி தெரிவித்தது.

## லொறி புரண்டது

கொடிகாமம்)

பூநகரி சங்குபிட்டிக் டற்பரப்பில் லொறி ஒன்று புரண்டு கிடக்கின்றது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. பாதையில் லொறியை ஏற்றி வந்த போது திடீரென்று லொறி கடலுள் புரண்டுள்ளது உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. ((86)



## வீரவேங்கை பவான்

## (துரைரத்தினம் திபாகன்)

வீரஜனனம் 21-10-1970

வீரமரணம் 06-06-1991

பாசமிகு தந்தையையும், தாயையும் உன்னோடு உடன்பிறந்த சோதரரையும் தவிக்கவிட்டு அமுதத் தமிழீழ அன்னையவள் விலங்கொடிக்க எழுந்த பல வேங்கைகளில் ஒருவனாகி கலைமலியூராம் அளவை மண் ஈன்றெடுத்த மாவீரன் துரைரத்தினம் தந்தையரும் தாய் இராசலட்சுமியும் வீரமைந்தனாய் பெற்றெடுத்த பவானே! திபாகன் என்ற இயற்பெயர் கொண்ட மறவனே! களம்பல கண்டு கயவரைக் கதிகலங்கச் செய்து மன்னார் மண் மீட்கவென மறப்படையுடன் சென்று இலக்கியம் காட்டும் விழுப்புண்ணை வயிற்றில் ஏற்று மானத்துடன் உயிர்நீத்த மாவீரனே பெற்றோர் கதறியழ உற்றோர் பரிதவிக்க நாட்டு மண்ணுக்கு உன்னுடல் ஈந்து ஈழத்தாய்க்கு உன் இன்னுயிர் கொடுத்து சிரித்த முகத்துடனே பவான் நீ மாவீரனாகி இன்றோடு தொண்ணூறு நாட்கள் முடிகின்ற வேளை இவன் நினைவு அஞ்சலிகள் தந்து மனம் தளராதவேளை போராடும்புலிவீரர் வளரும் அவர் விரதம் வரும் விடுதலையில் உம் நினைவும் தொடரும்.

(B/3049)

- நண்பர்கள்

## வர்க்க பேதமே

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து அவரது அமைச்சரவை அமைக்கப்பட்டது வரையிலான காலப் பகுதிகளில் நிகழ்ந்த முரண்பாடாகும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் முதன்மை பெற்றிருந்த அமைச்சர்களை பிரேமதாஸா ஓரம்கட்டியதனால் எழுந்த சிக்கலாகும். ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் திகதி இடப்படாத கடிதங்களை தனது பைகளில் வைத்துக்கொண்டிருந்தபோது எழாத பிரச்சினை தற்பொழுது எழுந்தமைக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் உயர் அதிகாரங்கள் காரணமல்ல. 'புகழ்மிக்கசந்ததியினர். அரசியலில் புறம்தள்ளப்பட்டமையினால் எழுந்த நெருக்கடியாகும்.

இதுவரை காலமும் ஆட்சியிலும் அதிகாரத்திலும் இருந்துவந்த (கடந்த இரண்டு வருடம் மட்டும் தவிர) உயர் வர்க்கத்திற்கெதிரான போராட்டம் இதுவாகும். உயர் வர்க்கத்தினால் நீண்ட காலமாக ஆட்சி புரியப்பட்டுவந்த ஸ்ரீலங்காஅரசாங்க அமைப்பும் அரசியற்கட்சிகளின் அமைப்பும் (ஐ.தே.கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி) அந்த உயர் வகுப்புக்களின் நலன்களைப் பேணக் கூடியதான வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. ஆகையினால் பிரேமதாஸா எதிர் நோக்கும் போராட்டம் முன்னைய போராட்டங்களை விடகடினமானதாகவே இருக்கும். இது எதிரியின் வீட்டினுள் நின்று போராடவேண்டியதொரு நிலையையொத்ததாகும்.

இதனைப் பிரேமதாஸாவும் உணர்ந்துள்ளார் போல் தெரிகின்றது. இதன் வெளிப்பாடே அதிருப்தியாளர்களின் கோரிக்கையைத் திருப்திப்படுத்தக் கூடியதான நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல்அமைப்பு முறையைபாராளுமன்றஅமைப்பு முறைக்கு மாற்றுவதற்கான கருத்துக் கணிப்பை மேற்கொள்ளத் தான் தயாராகவுள்ளதாக அறிவித்தமையாகும்.

இந் நிலையானது பிரேமதாஸா விட்டுக் கொடுப்புக்குத்தயாராக இருப்பதைக் காட்டுகின்ற போதிலும், தற்பொழுது இல்லாவிடினும் அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரது நிலை நெருக்கடி மிக்கதாகவே இருக்கும் என்று மட்டும் துணிந்து கூறலாம்.

# மரண அறிவித்தல்

## திரு. சின்னத்தம்பி கந்தையா

இருபாலையைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட உயர் திரு. சின்னத்தம்பி கந்தையா செப்ரம்பர் மாதம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை இறைவனடிசேர்ந்துவிட்டார். அன்னார் காலம் சென்ற திருமதி மங்கையர்க்கரசியின் அன்புக்கணவரும், வரப்பிரகாசம் (ஆசிரியர்இந்துக்கல்லூரி),காலஞ்சென்ற உயர் திரு. பரமசிவம், பரமேஸ்வரன் பதிவாளர் (யாழ். பல்கலைக்கழகம்), ராஜராஜேஸ்வரி. நாகேஸ்வரி, சிவராசா, (ஆசிரியர் அருணோதயாக் கல்லூரி), சிவானந்தம் (நில அளவையாளர்,வவுனியா), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மலோஜினி, ஜெயமலர், சிவபாதம் (ஜேர்மனி), லோகநாதன் இயந்திரப் பொருத்துனர் (சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), நிர்மலா, ரஞ்சனி, சிறிரஞ்சிதன் (முகாமையாளர் நெசவுத் தொழிற்சாலை, இணுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கேமநாதன், தர்சினி, லோஜினி, சிவரூபன், சுதாகரன், கலைவாணி, (முருகதாஸ், சயந்தன்,கௌரி, காயத்திரி, கௌசி, சோபிகா, கோபிநாத், ஹரிசனாத், விமலன், ஜனனி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகளும், தகனக்கிரியைகளும் 05-09-1991 மாலை 5 மணிக்கு நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
மகன்
க. பரமேஸ்வரன்

105, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(R- 1714)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.